தெரிவித்து, இந்த ஆண்டு அந்தச் சாலையை இருவழிப் பாதையாக அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையின் நீளம் 32 கிலோ மீட்டர். அதில் 5 கிலோ மீட்டர் தூரம் இப்போது இருவழிச் சாலையாக இருக்கிறது. மீதியுள்ள 27 கிலோ மீட்டர் தூரம் ஒருவழிப் பாதையாக இருக்கிறது. அதை இருவழிச் சாலையாக மாற்ற வேண்டுமானால், சுமார் 2 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நிதிநிலையிலே அதற்கு இடமில்லாத காரணத்தால், வருங்காலத்தில் இதை இருவழிப் பாதையாக அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும்.

திரு. கி. வேணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே, பெருவழித்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள், இரண்டு கோடி ரூபாயில் ஒரு செயற்குறிப்பை இதற்காகக் கொடுத்து இருந்தார்கள். மத்திய சர்க்காரிடத்திலேயிருந்து அதற்கு ஓரளவுக்குத்தான் அனுமதி கிடைத்து. இப்போது மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் சொல்வதைப் போல 5 கிலோ மீட்டர் வரையிலும் இருவழிப் பாதையாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அனுப்பப்பட்ட அந்த மதிப்பீடுகள் என்ன ஆயின? அதைக் கேட்டு இந்த ஆண்டு நிதிநிலைத் திட்டத்திலே அதைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு கேட்டதிலேதான் அந்த 5 கிலோ மீட்டர் தூரம் செய்யப்பட்டிருக்கிறது. மீண்டும், உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அதைப்பற்றி விரைவுபடுத்துவதற்கு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 193, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர்.

193—

அரசு ஆணைகள் மொழிபெயர்த்தல்

***4400—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1997 மார்ச் 13]

(அ) தலைமைச் செயலகத்தில் நடைமுறையில் இருந்த தமிழ் அல்லாத மற்ற மொழிகளில் மொழிபெயர்த்து வந்த அரசு ஆணைகள் தற்போது மொழிபெயர்க்க தடை செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10-15

திரு. பி. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995 ஆம் ஆண்டு அரசாணை எண் 27-ன்படி மொழி பெயர்ப்புத் துறையே நிறுத்தப்பட்டிருக்கிறது. அரசாணை மட்டுமல்ல, மொழி பெயர்ப்புத் துறையில் பணியாற்றிய அந்தப் பணியாளர்கள், அலுவலர்கள் எல்லாம் வேறு வேலைக்கு அமர்த்தப்பட்டுவிட்டதாக அரசாணை கூறுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை முழுமையாக அறிந்து அந்த ஆணையை ரத்து செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, அந்த அரசாணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது மொழி பெயர்ப்புத் துறை அல்ல. ஏற்கெனவே இங்கே மொழி பெயர்ப்புத் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு இயக்குநர், மூன்று உதவி இயக்குநர்கள், உட்பட 22 அலுவலர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல சட்டமன்றத்திற்கு வருகிற சட்டமுன்வடிவுகள், பிறகு கொள்கை விளக்கக் குறிப்புகள் என்று வெளி மாநிலங்களிலிருந்தோ அல்லது தில்லி நடுவண் அரசிலிருந்தோ எது வந்தாலும் மொழி பெயர்ப்பதற்கான துறை இங்கே இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இந்தத் துறை தேவையான பகுதிகளை தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும், இரண்டு இந்தி மொழி பெயர்ப்பாளர்களைக் கொண்டு இந்திக்கும் மாற்றிக்கொடுக்க தொடர்ந்து இயங்கி வருகிறது. எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த அரசாணையை என்னிடத்திலே நேரடியாகக்

காட்டினால் அவர் எதைக் குறித்து, எந்த அரசாணையைக் குறித்துச் சொல்கிறார் என்பதைத் தெளிவுபடுத்தி, அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 194, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

194—

தொழில் பயிற்சி பயிலகம் அமைத்தல்

***2629—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் வட்டம், கண்டமங்கலத்திலும், விக்கிரவாண்டியிலும் இரண்டு தொழில் பயிற்சி பயிலகம் ஐ.டி.ஐ. அமைக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விக்கிரவாண்டியில் ஏற்கனவே இரண்டு தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 19-9-1996 அன்று வெளியிடப்பட்ட அரசாணைகளின்படி, தொழிற் பயிற்சி நிலையம் ஏதுமில்லாத கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் தனியார் தொழிற் பயிற்சி நிலையம் துவங்கவும், அவ்வாறு தனியார் எவரும் முன்வராத நேர்வில், அரசு தொழிற் பயிற்சி நிலையம் துவக்கப்படவும் வாய்ப்பு உள்ளது

திரு. ச. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டமங்கலத்திலே தொழிற் பயிற்சிக் கூடம் அமைக்கப்படும் என்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் விக்கிரவாண்டியிலே இருக்கக்கூடிய இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் ஏழைகள் எட்டமுடியாத அளவிற்கு அந்தத் தொழிற் பயிற்சி நிலையங்கள் இருப்பதால், அரசுத் தரப்பிலே தொழிற் பயிற்சி நிலையம் துவக்க இந்த அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய கொள்கை அறிவிப்புப்படி, எங்கெல்லாம் தொழிற் பயிற்சி நிலையங்கள் இல்லையோ, அந்தப் பஞ்சாயத்து ஒன்றியங்களில் மட்டும் படிப்படியாகப் புதிதாகத் தொழிற்